9th August 1966]

திரு. மு. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்கங்களுக்கும் 1965-66-ல் ஹரிஜன சேவக் சங்கம், சென்னை-க்கு ரூ. 9,000 கொடுக்கப்பட்டிருக்கிறது, தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம், சென்னைக்கு ரூ. 11,900 கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த சங்கங்கள் சர்க்கார் அங்கிகாரம் பெற்றனவா? அவைகளில் நிர்வாகிகள் யார்? கொடுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்று, தணிக்கை செய்பவர் யார் என்று கூறுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த இரண்டு ஸ்தாபனங்களும் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள். தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்திற்குத் தலைவர் திரு. என். எம். ஆர். சுப்பராமன்; தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்திற்குத் தலைவர் மதிப்புக்குரிய அங்கத்தினர் பரமேஸ்வரன் அவர்கள்.

திரு. வை. சங்கரன் : ஸார், ஹரிஜன சேவக் சங்கத்தினால் நடத்தப்படும் மாணவ விடுதிகளில் மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் உதவியானது சர்க்காரால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ளதைவிட 2-3 ரூபாய் குறைவாக இருப்பதாகக் குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? மெயின்டினன்ஸ் கிராண்ட்டும் குறைவாக இருக்கிறது என்ற குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசிலித்ததா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அரசாங்கம் பரிசீலனை செய்தது. அரசாங்கத்தின் நிதி நிலை காரணமாக உயர்த்த முடியவில்லை. நிதி நிலையைப் பொறுத்து பின்னால் பார்க்கலாம்.

Pay scales of Police personnel

* 266 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have proposed to increase the pay scales of Police personnel in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) அரசாங்கம் 'ஹெட் கான்ஸ்டபிள்கள்', 'போலீஸ் கான்ஸ்டபிள்கள்', 'லான்ஸ் நாயக்குகள்', 'நாயக்குகள்', ஆகியோரின் சம்பள விகிதத்தைப் பின் வருமாறு மாற்றியமைத்துள்ளது:—

	முந்திய சம்பள விகிதம். ரூ.	புதிய சம்பள விகிதம், ரூ.
'போலீஸ் கான்ஸ்டபிள்கள்' 'லான்ஸ் நாயக்குகள்'	65—1—70—2—90	70—1—75—2—95
'ஹெட் கான்ஸ்டபிள்கள்' 'நாயக்குகள்'	85—2—105	90—2—110

மேலே குறிப்பிடப்பட்ட புதிய சம்பள விகிதம், 1-6-1966 முதற் கொண்டு, அதாவது 1-7-1966-ல் வழங்கவேண்டிய 1966 ஜூன் மாதச் சம்பளத்திலிருந்து செயலுக்கு வந்தது. போலீஸ்

9th August 1966

துறையில் ஹெட்கான்ஸ்டபிள்கள் நிலைக்கு மேற்பட்ட பிற பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வை. சங்கரன் : போலீஸ் அலுவலர்கள் வெளியிடங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் குறைவாக இருக்கிறது என்று முன்பே கூறப்பட்டது. அவைகளையும் அதிகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஓரளவு கூட்டியிருப்பதாக ஞாபகம். தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

Chemical fertilisers

* 267 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that two wagon loads of about 810 bags of chemical fertilisers were seized recently at Somanur Railway Station, near Coimbatore by the Vigilance Cell of the C.I.D. Police as booked without valid permits; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) A case against the persons who booked the fertilisers. for contravening provisions of the Fertiliser Control Order, 1957 has been filed and is pending disposal in the District Magistrate's Court at Coimbatore.

திரு. வை. சங்கரன் : யார் அந்த நபர்கள் ? அதோடு ரெயில்வே அதிகாரிகளும் உடந்தை என்று விசாரித்துக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : கேஸ் கோர்ட்டில் இருப்பதால் இப்போது சொல்லுவதற்கில்லை.

சிதம்பரம் தாலூகாவுக்கு டிராக்டர்கள்

* 268 கேள்வி—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூகாவிற்கு 1965-66-ல் விவசாயத்திற்காக வாடகைக்கு விடும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட டிராக்டர்கள் எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : இரண்டு.

Water for irrigation

* 269 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any scheme has been envisaged and undertaken to tap underground water to supplement irrigation in the various delta-areas of the State; and

(*b*) if so, the details thereof?